
மு. பெ. சத்தியவேல்முருகனார்

மின்னஞ்சல் : editor@dheivathamizh.org

தெய்வமுரசு
ஆன்மீக மாத இதழ்



# விநாயகர் சதுர்த்தி வழிபாடு

முதலில் நாடோறும் பூசை செய்பவர்கள் தமது நாட்பூசையை முடித்துக் கொள்க. அவர்கள் ஏற்றவாறு வரும் சிறப்பு வழிபாட்டினை இணைத்து மேற்கொள்க. நாட்பூசை இல்லாதவர்களை உளப்படுத்தி இச்சிறப்பு வழிபாடு செய்முறைகள் அளிக்கப்படுகின்றன.

**1.0.** முதலில் குளித்துவிட்டு தூய்மையாக பூசை செய்யும் இடத்திற்கு வரவேண்டும். குளிக்குமுன் தூய்மையான நீரை உரிய வாளியில் அல்லது பாத்திரத்தில் நிரப்பிக் கொள்க. அதில் 'ஓம்' என்று எழுதி உள்ளங்கையால் மூடி (இதற்கு பதாகை முத்திரை என்று பெயர்) ஏழுமுறை ஓங்காரத்தை ஓதுக. பின்னர் வழக்கப்படி குளிக்க. பின்னர் இறுதியாக குவளையில் நீரை முகந்து அதனை உள்ளங்கையால் மூடி வரும் பாடலைப் பாடுக:

**காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்**
**கோதை குழலாட வண்டின் குழாமாடச்**
**சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி**
**வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி**
**சோதித் திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி**
**ஆதித் திறம்பாடி அந்தமா மாபாடி**
**பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்**
**பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.**

பின்னர் குவளை நீரை தலைமேல் ஊற்றிக் குளிக்க. இவ்வாறு பாடி இறையுணர்வோடு தலைமேல் ஊற்றிக் கொள்கிற நீர் அருள் வீழ்ச்சியாக (சத்திநிபாதம்) மாறி நம் உடலைப் பேதித்து அதாவது மாற்றி பூசை செய்வதற்குத் தகுதியாகும் தன்மையைக் கொடுக்கும். இதை சிறப்பு நாளன்றி நாடோறும் கூட கடைப்பிடிக்கலாம். சிறப்பு நாளில் நிச்சயமாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

**1.1.0.** இனி, பூசை செய்யுமிடத்திற்கு வந்து தமிழ்மறை சைவ அனுட்டானத்தைச் சிவதீக்கை பெற்று நாடோறும் செய்கிறவர்கள் அதைச் செய்து கொள்க. அல்லாதவர்கள் வரும் முறைகளைக் கடைப்பிடிக்க.

**1.1.1.** ஒரு பூவை எடுத்து இருதயம், கண்டம், நாக்கின் அடி, புருவ நடு, உச்சித்துளை ஆகிய இடங்களில் தொடுக. பின் வரும் பாடலை ஓதித் தலைமீது சொரிக:

**எல்லாக் கலையும் இடைபிங்கலை நடுச்**
**சொல்லா நடுநாடி ஊடே தொடர்மூலம்**
**செல்லா எழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்**
**நல்லோர் திருவடி நண்ணிநிற் பாரே**

**-திருமந்திரம்**

உடன் நெற்றியின் இருபக்கங்களிலும் குட்டிக்கொள்க. குட்டிக்கொண்டு 'என் ஆன்மா இறை திருவருளால் தூய்மை ஆகுக'. என்று மீண்டும் மலரைத் தலையில் சொரிக. இது உயிர்த்தூய்மை (ஆன்மசுத்தி) எனப்படும்

**1.1.2.** நமது உடல் ஐம்பூதங்களின் மயக்கம். அதாவது கலவை, மண், புனல், தீ, காற்று, விண் ஆகிய ஐம்பூதங்களும் நமது உடலில் உள்ளன. ஒவ்வொன்றையும் அவ்வவற்றின் பகைப் பூதங்களால் ஒடுக்குவதாகப் பாவிக்க.

மலர் எடுத்து மார்பு, நெற்றி, சிரசு ஆகிய இடங்களில் ஒற்றி, 'எனது உடலில் உள்ள ஐம்பூதங்களும் ஒன்றில் ஒன்றாக இறைதிருவருளால் ஒடுங்குக' என்று தலையுச்சிக்குக் கொண்டு போய் பின்புறம் போடுக. இது பருவுருத் தூய்மை (தூலதேக சுத்தி) எனப்படும்.

**1.1.3.** மீண்டும் மலரை எடுத்து புருவ நடுவில் ஒற்றி, ''எனது உடலில் ஐம்பூதங்களுக்கும் நுண்மையாய் உள்ள ஏனைய முப்பத்தோரு நுண்ணுருக் கூறுகளும் ஒன்றில் ஒன்றாக ஒடுங்குக'' என்று ஓதி மலரை தலைமீது சொரிந்து கொள்க. இது நுண்ணுருத் தூய்மை (சூக்கும தேக சுத்தி). எனப்படும்.

**1.1.4.** அடுத்து உடம்பில் கால் கட்டைவிரல் முதல் தலை உச்சிவரை மலர்களால் தடவி, சிவசத்தியால் உண்டான ஞானத்தீயால் தூலவுடல், நுண்ணுடல் ஆகியவற்றில் படிந்துள்ள மாசுகள் எரிக்கப்பட்டதாகப் பாவித்து,

**'ஓம் அண்டம் அடியுறை அழலே எழுக' என்றும்**
**'ஓம் இறைதிரு கருவியால் உடல்மாசுகள் எரிந்தேகுக'**

என்றும் ஓதி மலரை தென்மேற்கு மூலையில் விட்டெறிக.

இது உடல் மாசு எரித்தல் (பூத தோடதகனம்) எனப்படும்.

**1.1.5.** அடுத்து தலை உச்சியில் இருந்து கால்வரை மலர்களால் தடவி,

**''ஓம் என் உடலெலாம் விரிய எற்புத்துளை தொறும்**
**அமுத தாரைகள் ஏற்றி அள்ளூறும் ஆக்கை அமைத்தனன் போற்றி''**

என்று ஓதி மலர்களை தம் உடல்மீது சொரிந்து கொள்க. இது அமுதாடல் (அமுதாபிடேகம்) எனப்படும்.

**1.1.6.** அடுத்து மலர்களை எடுத்து இருதயத்தில் வைத்து,

**''ஓம் நலம் புகுந்து என்னொடு நாதனை நாட**
**மனம் புகுந்து என்னுயிர் மன்னுக போற்றி''**

என்று ஓதி அமுதாக்கப்பட்ட உடலில் தூய்மை செய்யப்பட்ட ஆன்மாவை நிலை நிறுத்துக. இது உயிர் பதித்தல் (சீவத்தாபனம்).

**1.1.2.** முதல் 1.1.6 வரை உடல் தூய்மை (பூதசுத்தி)

எனப்படும்.

**1.2.0.** மூன்று முறை கையைத்தட்டி 'ஓம் இறைதிரு கருவியால் ஏகுக' என்றும் எல்லாத் திசைகளிலும் விரலால் சொடுக்கி 'ஓம் இறைதிரு கருவியால் கடிதேகுக' என்றும் தீயசத்திகளைத் துரத்துக. பின்னர் சுட்டு விரல் மட்டும் நிமிர்த்தி மேலும் கீழும், பக்கங்களிலும் சுற்றிக் காட்டி, 'ஓம் இறைதிரு வடிவே சூழ்ந்து காக்க' என்று ஓதுக. 'ஓம் சிவாமுதம் பொழிக' என்று தேனு முத்திரை காட்டுக. தேனுமுத்திரை காட்ட இயலாதவர்கள் சுற்றிலும் மலர்களைச் சொரிக.

**1.3.0.** இனி அகவேள்வி செய்க. இடுப்புப் பாகத்தில் முக்கோண வடிவில் ஒரு குண்டம் இருப்பதாகப் பாவித்து, அதில் குண்டலியாகிய நெருப்பை இட்டு வேள்வி ஆற்றியதாகப் பாவித்து, உள்ளங்கையில் மலர்களை எடுத்து மூடி நாபியில் ஒற்றிவைத்துக் கொண்டு 'ஓம் சிவாய நம' என்று பதினோரு முறை ஓதி தன்மேல் மலர்களைத் தூவிக் கொள்க.

**1.4.0.** இனி, அகத்திலிருந்து புறத்தே வழிபாடு செய்வதற்கு ஏற்ப கரத்தை சிவமாகத் திகழச் செய்தல் வேண்டும்.

'ஓம் சிவாய நம' என்று ஓதி வலது உள்ளங்கையில் இடதுகைக் கட்டை விரலால் சந்தனம், பூ, மஞ்சளரிசி வைத்து தடவுக. மற்ற கைக்கும் இதே சடங்கை ஆற்றுக. பின்னர் இருகரங்களையும் கூப்பி 'ஓம் சிவாய நம' என்று ஓதுக. இது சிவக்கரம் செறிதல் (சிவஹஸ்தம்) எனப்படும்.

**1.5.0.** இனி, பஞ்சபாத்திரத்தில் நீரை விட்டு அதை உள்ளங்கையால் மூடி 'ஓம் சிவாய நம' என்று ஏழுமுறை ஓதுக. அதில் அட்சதை, சந்தனம், அருகம்புல் நுனிகள் ஆகியவற்றை இட்டு மீண்டும் ஏழு முறை ஓம் சிவாய நம' என்று ஓதுக. இந்த அருள் நீரை எடுத்து எல்லாப் பூசைப் பொருட்களிலும் தன் மேலும் ''ஓம் இறை திருகருவியால் எல்லாக் குற்றங்களும் கடிதேகுக'' என்று ஓதித் தெளிக்க. இது பொருள் தூய்மை (திரவிய சுத்தி) எனப்படும்.

**1.6.0.** இனி, ஓம் சிவய நம; ஓம் சிவாய நம; ஓம் சிவாஅய நம'' என மூன்று வகையாக மூலமந்திரத்தை ஓதுக. இது மந்திரத் தூய்மை (மந்திர சுத்தி). எனப்படும்.

**1.1.0.** முதல் **1.6.0.** வரை பூசைக்கு முன்னாக செய்ய வேண்டிய ஐவகைத் தூய்மைகளான ஆன்மத்தூய்மை, உடல் தூய்மை, இடத்தூய்மை, பொருள் தூய்மை, மந்திரத் தூய்மை ஆகியவை நிறைவேறின.

**2.0.** இனி வீட்டுப்பிள்ளையாரை நாடோறும் பூசை செய்பவரானால் சிறப்பு அபிடேகங்களை செய்து பிள்ளையாரை மணையில் எழுந்தருளச் செய்க. அவர்கள் நாடேறும் ஆகமப்படி அல்லது அவர்களது குரு கூறியபடி இயற்றும் அபிடேகங்களைச் செய்க. நாம் இங்கே எடுத்துக் கொள்வது சிறப்பு வழிபாடு மட்டும் செய்கிறவர்களுக்கு உரிய வழிகாட்டுதலே.

எனவே வீட்டுப் பிள்ளையார் இல்லாதவர்கள் வாங்கி வந்த களிமண்ணால் செய்யப்பெற்ற பிள்ளையாரை உரிய மணையில் எழுந்தருளச் செய்க. அலங்காரங்களை எல்லாம் மலராலும், தோரணங்களாலும், சந்தனத்தாலும், சரிகை காகிதங்களினாலும், மாலைகளாலும், அழகிய ஆடைகளாலும் செய்து கொள்க. இதற்கு வரைமுறை கிடையாது. அவரவர் மனத்திற்கு உகந்த வண்ணம் தகுதிக்கேற்ப செய்க.

**2.1.0** 'ஓம்' என்று ஏற்றி இறக்கி மூன்று முறை உச்சரிக்க. பின்னர்,

**"எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே**
**எல்லாம் வலான்றனையே ஏத்து"**

என்று இரண்டு முறை ஓதுக. பின்னர், தலையில் குட்டிக் கொண்டு,

**"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும்-உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்**
**காதலால் கூப்புவர்தங் கை"**

என்று ஓதுக.

'ஓம் பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி' என்று ஓதி பஞ்ச பாத்திரத்தில் இருந்து நீரை எடுத்துக் கையலம்பி பூமியில் விடுக.

"ஓம் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு என் மனவுருவை ஒப்படைக்கின்றேன்"
"ஓம் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு என் அறிவுருவை ஒப்படைக்கின்றேன்"
"ஓம் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு என் சிவவுருவை ஒப்படைக்கின்றேன்"

என்று மூன்று முறை உள்ளங்கையில் பஞ்சபாத்திரத்திலிருந்து உருத்திரிணி எனப்படும் தினை நீர்க் கரண்டியால் நீரை விட்டுப் பருகி ஓதவும். இதனால் இறைவனுக்கு உடல், பொருள் ஆவி மூன்றும் ஒப்படைக்கப்படுவது காண்க. இப்படி ஒப்படைப்பில்லாத பூசை வழிபடும் இறைவனைச் சென்றடையாது.

இனி, திருநீற்றை எடுத்து இடது உள்ளங் கையில் வைத்து வலது உள்ளங்கையால் மூடி 'ஓம் சிவாய நம' என்று பதினோரு முறை ஓதி நீர் விட்டுக் குழைத்து நெற்றி, தோளிரண்டு, கைமூட்டிரண்டு, மணிக்கட்டிரண்டு, மார்பு, நாபி, கால் மூட்டிரண்டு ஆகிய இடங்களில் அணிந்து கொள்க.

**"ஓம் சாற்றிய மூல மந்திரத் தால்உரு**
**நீற்றுக் கோடியில் நிமிர்த்தினன் போற்றி"**

என்று ஓதி கை கூப்புக.

**2.2.0.** இனி, சங்கல்பம் எனப்படும் திண்ணெண்ணம் பூணுதல் வேண்டும். அதற்கு உரிய சொற்றொடர்கள் வருமாறு :

**"ஓம் மணங்கமழ் மறைத்தமிழ் உரைத்துளம் உருகி**
**கணபதி பூசை இயற்றுவன் போற்றி"**
**காலமும் இடமும் கருதிச் செய்தேன்**
**ஞால நலமெலாம் நல்குக போற்றி"**

**2.3.0.** அடுத்து மணி வழிபாடு செய்க.

**"ஓம் என்னுள் ஒலிக்கும் பதின்ஒலி அவற்றை**
**மன்னி ஒலிக்கும் மணியே போற்றி"**

என்று ஓதி மணியின் மீது உள்ள நந்தியின் மீது மலரிடுக.

**2.4.0.** இனி, உயிர்வளி நிறுத்தல் (பிராணாயாமம்) என்பதைச் செய்க.

அதாவது வலதுகை நடு விரலைக் கட்டை விரலைத் தொடும்படி மடித்து கொள்க. கட்டை விரலால் மூக்கின் வலப்பாகத்தை அழுத்தி மூடுக. பின்னர் இடப்பாக தொளை வழியாக மூச்சினை உள்ளே இழுத்து மோதிர விரலால் இடப்பாகத் தொளையை மூடி உடனே கட்டைவிரலை எடுத்து வலது தொளை வழியாக வேகமாக விடுக. விடும்போது, ஓம் இறைதிரு கருவியால் கடிதேகுக என்று ஓதுக. இதே போன்று வலப்பாகத்தில் மூச்சை இழுத்து இடப்பாக வழியாக விடுக. விடும் போது மேற்படி மந்திரத்தை ஓதுக. இதனால் மூச்சு தூய்மை ஆகிறது.

பின்னர் முன்போல் வலது பாக மூக்கினைக் கட்டை விரலால் அழுத்தி இடத்தொளை வழியாக முடிந்த மட்டும் மூச்சை இழுத்து உள்ளே மூச்சை நிறுத்துக. அந்நிலையில் பதினொரு முறை 'ஓம் சிவாய நம' என்று மனத்தால் ஓதுக. உள்ளே நிறுத்தப்பட்ட அந்த மூச்சு குண்டலி ஆற்றலை தூண்டி எழுப்பியதாக ஆகும்.

பின்னர் மூச்சினை வலப்பாக நாசி வழியாக விடுக. இதேபோன்று வலப்பாக நாசி வழியாக மூச்சை உள்ளே இழுத்து நிறுத்தி இடப்பாக நாசி வழியாக விடுக. நிறுத்தும்போது 'ஓம் சிவாய நம' என்று மனத்தால் பதினொருமுறை ஓதுக. இதுவே உயிர்வளி நிறுத்தல் ஆகும்.

**2.5.0.** அடுத்து மெய்யொன்றல் (சகளீகரணம்) என்பதைச் செய்க. கையில் மலர்களை எடுத்து தலைமீது வைத்து

**"ஓம் முடிமுதல் அடிவரை என்னுடல் மேவி**
**கடிதில் கலந்தருள் கணபதி போற்றி"**

என்று ஓதி உடலெலாம் மலர்தூவிக் கொள்க.

**2.6.0.** பின்னர் கண்களைமூடி கணபதியை தியானம் செய்து, சிறிதுநேரம் பொறுத்து,

**'ஓம் கணபதி என்று அன்பெலாம் திரட்டி**
**ஆம்படி வேண்டி உள்கினன் போற்றி'**

என்று கை கூப்புக.

**2.7.0** சிறிதளவு மலர்களை எடுத்து இதயத்தில் ஒற்றி வைத்துக் கொண்டு விநாயகப் பெருமானை எழுந்தருள (ஆவாகனம்) வரும் மந்திரப்பாடலையும் வரிகளையும் ஓதி பிள்ளையார் மீது சொரிக:

**"பிடியதன் உருஉமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்**
**கடிகண பதிவர அருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"**
**"செப்பிய ஆகம வழி கணபதியே**
**இப்பொழுது இங்கே எழுவாய் போற்றி"**

**2.8.0.** விநாயகப் பெருமான் ஆற்றல் விந்துவாக மேற்கூறிய களிமண் பிள்ளையார் உருவத்தில் மேற்கூறிய எழுந்தருளல் மந்திரத்தால் அங்கே வந்து கலந்து நிற்கின்றான். அந்த அருளாற்றல் விந்துவை விரித்து களிமண் பிள்ளையார் உருவம் பெற அமைக்க வேண்டும். இதற்குத் தமிழ்ச் சம்மிதா மந்திரங்களை ஓத வேண்டும். அவை :

**ஓம் தனியொளித் தலைவா போற்றி**
**ஓம் உயிரொளிர் பிரானே போற்றி**
**ஓம் அவிரொளி இயவுள் போற்றி**
**ஓம் உமையொரு கூறா போற்றி**
**ஓம் மன்னொளி முதலே போற்றி**
**ஓம் இறைதிரு இதயமே போற்றி**
**ஓம் இறைதிரு முகமே போற்றி**
**ஓம் இறைதிரு முடியே போற்றி**
**ஓம் இறைதிரு வடிவே போற்றி**
**ஓம் இறைதிரு கண்ணே போற்றி**
**ஓம் இறைதிரு கருவியே போற்றி**

இவற்றை ஓதி மலரிடுக.

இதன் மூலம் விநாயகருக்கு வடிவம் கிடைக்கிறது. இதை உருபதித்தல் (பிராண பிரதிட்டை) என்பர்.

**2.9.0.** மேற்படி பதித்த உருவை ஆசனத்தில் அமர்த்த வேண்டும்.

**"ஓம் நாதம் விளங்கி நற்றிரு வணையைப்**
**போதக் கணபதிக்கு இட்டேன் போற்றி"**

என்று ஓதி பிள்ளையாரை அமர்த்தியுள்ள மணைக்கு மலரிடுக. பிறகு,

**"ஓம் பன்னிறம் கிளரொளி பன்மணி அணைமேல்**
**மன்னு மகா கணபதியே போற்றி"**

என்று ஓதி அந்த மணை மீது கணபதியை நிலை செய்க.

**2.10.0.** பின்னர் அருள்நீரை தினை நீர்க் கரண்டியில் எடுத்து,

*"ஓம் கலைநிறை கணபதியின் கமல பாதங்களை விளக்கி வணங்குகின்றேன்.*
*ஓம் கலைநிறை கணபதியின் திருவாய் விளக்கி வணங்குகிறேன்.*
*ஓம் கலைநிறை கணபதியின் திருமுடி விளக்கி வணங்குகிறேன்".*

என்று முறையே திருவடியிலும், வாயின் புறத்திலும், திருமுடியிலும் காட்டி விடுக. இவை அடிநீர் (பாத்யம்), வாய்நீர் (ஆசமனம்), முடிநீர் (அர்க்கியம்) எனப்படும் முதல் பணிவிடைகள் (முதல் உபசாரங்கள்) ஆகும்.

**2.11.0.** இனி களிமண் பிள்ளையாருக்கும் பாவனையால் அபிடேகங்களைச் செய்க. ஒவ்வொரு அபிடேகம் செய்யும்போதும் அதைச் செய்ததாகப் பாவித்து மலரோ, மஞ்சளரிசியோ (அட்சதை) பிள்ளையார் மீது தூவுக. உடன் ஒற்றைச்சுடர் (ஏகதீபம்) காட்டுக. இயலாதபோது ஊதுவத்தி காட்டுக. பின்னர் அபிடேகித்ததைத் தூய்மை செய்வதாக நீர் காட்டி விடுக. குறிப்பிட்ட சில அபிடேகங்களுக்கு மட்டும் இங்கே ஆசிரியர் எழுதிய பிள்ளையார் பெற்றி நானூற்றிலிருந்து மந்திரங்கள் கொடுக்கப்படுகின்றன.

அவை வருமாறு :–

## நெய்யபிடேகம்

வையகம் காக்கும் வரத என்று

நெய்யபிடேகம் நேர்ந்தனன் போற்றி
மூலப்பொருளே மெய்யொளிப் பொருளே
தூல ஆரத்தி எடுத்தேன் போற்றி
நெய்யபிடேகம் நேர்ந்ததன் பின்னர்
துய்ய நீர் ஆட்டி வணங்கினன் போற்றி

### பாலபிடேகம்

ஏலமு தெமக்கு என நினைந் தேத்தி
பாலமு தம்சொரிந் தாட்டினன் போற்றி
மூலப் பொருளே மெய்யொளிப் பொருளே
தூல ஆரத்தி எடுத்தேன் போற்றி
பாலபிடேகம் பரவிய பின்னர்
வாலநீ ராட்டி வணங்கினன் போற்றி

### தயிரபிடேகம்

உயிர்களின் உறவே ஒரு தனித் துணையே
தயிரமுதம் சொரிந்தாட்டினன் போற்றி
மூலப் பொருளே மொய்யொளிப் பொருளே
தூய ஆரத்தி எடுத்தேன் போற்றி
தயிரபிடேகம் தாழ்த்திய பின்னர்
செயிர்தீர் நீர்விடுத் தாட்டினன் போற்றி

### தேனபிடேகம்

வானமு தெமக்கு வாய்த்தது என்று
தேனபி டேகம் செய்தனன் போற்றி
மூலப் பொருளே மெய்யொளிப் பொருளே
தூல ஆரத்தி எடுத்தேன் போற்றி
தேனபி டேகம் தேர்ந்ததன் பின்னர்
ஆனநீர் சொரிந்துடன் ஆட்டினன் போற்றி

### பஞ்சாமிருத அபிடேகம்

தஞ்சம் நீயலால் வேறிலை என்று
பஞ்சா மிருதம் பொழிந்தேன் போற்றி
மூலப் பொருளே மெய்யொளிப் பொருளே
தூல ஆரத்தி எடுத்தேன் போற்றி
பஞ்சாமிருதம் படர்ந்ததன் பின்னர்
எஞ்சாது இயைநீர் ஆட்டினன் போற்றி

### விபூதி அபிடேகம்

வெவ்விய வினைகள் வேரற விபூதி
அவ்வுத லாகச் சொரிந்தனன் போற்றி
மூலப் பொருளே மெய்யொளிப் பொருளே
தூல ஆரத்தி எடுத்தேன் போற்றி
நீற்றபி டேகம் நிகழ்ந்ததன் பின்னர்
ஆற்றுநீர் சொரிந்துடன் ஆட்டினன் போற்றி

### வாய்நீர் வழங்கல்

திருமஞ்சனம் இவை துய்த்ததன் பின்னர்
திருவாய் விளக்கநீர் தந்தனன் போற்றி

(நீர் காட்டி விடுக)

### பட்டுடுத்தல்

தூமென் துகிலால் துடைத்த பின்னர்
தோமில் பட்டுடை புனைந்தனன் போற்றி

(சாத்திய ஆடைமீது மலர் சொரிக)

### மணப் பொருள் தூவல்

கடிமணம் பன்னீர் களப கத்தூரி
அடிமுடி எங்கும் இறைத்தனன் போற்றி

(பன்னீர், மணப்பொடி, தூவுக. அல்லது பாவனையாக மலர் தூவுக)

### ஆபரணம் புனைதல்

நவமணி பொதிந்த நல்லாபரணம்
சிவணி எழில் பெற புனைந்தனன் போற்றி

(சாத்திய ஆபரணங்கள் மீது மலர் சொரிக)

### நீறிடல்

ஆற்றல் அதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடியில் நிமிர்த்தினன் போற்றி

(திருநீறு தெளிக்க)

### சந்தனம் சாத்தல்

புந்தி விளங்கும் புருவ நடுவில்
சந்தனம் சாத்தி மகிழ்ந்தனன் போற்றி

(சந்தனம் தெளிக்க)

### குங்குமம் இடல்

அந்தச் சந்தனம் அழகுற விளங்க
சிந்தூரக் குங்குமம் சேர்த்தனன் போற்றி

(குங்குமம் தெறிக்க)

### மலர் மாலை இடல்

பொதியெனப் பல்வகை மணமலர் தொடுத்து
அதியெழில் மாலைகள் அணிதோள் போற்றி

(மலர் தூவுக)

**2.12.0.** இனி அங்கங்களுக்கு எல்லாம் பூசைசெய்க. விநாயகரின் ஒவ்வொரு அங்கத்தையும் கூறி, அவற்றை மலர்களால் அருச்சிக்க. அவ்வாறு செய்யும் அங்க பூசை வருமாறு :

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதம் வணங்கிப் பணிந்தனன் போற்றி
காலிணை சூழ்ந்து கவின்பெறு கானம்
நாலும் செய்யும் நூபுரம் போற்றி
பணைத்த இடையில் பாங்குறப் பொலியப்
பிணைத்த பொன்னாண் பணிந்தனன் போற்றி
மெல்லெனச் சூழ்ந்து பன்னிறம் கிளந்து
புல்லிப் பொலியும் பூந்துகில் போற்றி
உலகம் படைத்துப் புரந்து அதை ஒடுக்கும்
பலஞ்செய் பேழை வயிறது போற்றி
பேழை வயிறு பிணைத்த நாகச்
சூழைச் சொல்லி ஏத்தினன் போற்றி
ஞான விசாலம் காட்டிய ஆங்கு
மான அகன்ற மார்பு போற்றி
நோலும் அடியார் தூக்கி அருளிடும்

நாலும் துதிக்கை நம்பினன் போற்றி
ஆணைத் தானடை யாளம் காட்டும்
வாணிறத் தந்தம் ஒன்றது போற்றி
மாற்றலர் தமக்கு மறலியாய் விளங்கும்
நாற்றோள் நலம்பெற திகழ்க போற்றி
திண்வரை தோளொடு மார்பில் துவளும்
புண்ணியம் திகழ்முப் புரிநூல் போற்றி
பாசம் அங்குசம் மாதுளை விளங்க
தேசத் தந்தம் திகழ்கரம் போற்றி
நஞ்சை நிறுத்திய நற்செயல் அதனால்
விஞ்சிய காள கண்டம் போற்றி
பார்க்கப் பார்க்கப் பேரெழில் பிறங்கும்
ஆர்க்கும் ஆனை முகமே போற்றி
பரத்தோடு அபரம் பராபரம் மூன்றால்
வரம்பொழி ஞான மும்மதம் போற்றி
நெற்றிக் கண்பெறு நிமலனே தானென
உற்றிடுங் கண்கள் மூன்றும் போற்றி
மறத்தினை நீக்கி அறத்துறை சேர்க்கும்
முறத்தது போன்ற மாசெவி போற்றி
சாயுச்சியத்தின் சால்பினை விளக்கும்
தூவுச்சி திகழ் மணிமுடி போற்றி
உழற்றும் உயிர்களின் வினையைத் தணிக்க
நிழற்றும் நற்குடை நயமே போற்றி
எனப்பல ஏத்த என்னன்பு இரங்கி
மனத்தெதிர் நின்ற மகிழுரு போற்றி

**3.0.** இப்படி அங்கங்கள் சிறக்க மனத்தெதிர் நின்ற மகிழுருவாக விநாயகர் பூரணப் பொலிவுடன் தோன்றி நிற்க இனி, தூப, தீப, அமுது படைத்தல் போன்ற பணிவிடை வழிபாடுகளை இனித் தொடங்குக.

**3.1.0.** *"ஓம் சால உயர்ந்த சாம்பிராணி*

ஏலப்புகை சூழ்ந்து ஏத்தினன் போற்றி என்று ஓதி சாம்பிராணி புகை, ஊதுவத்தி புகை ஆகிய நறும்புகை காட்டுக.

**3.2.0.** *"ஓம் உய்யும் வகைதந் தருளிட ஒருதிரி*

*நெய்யிடு தீபம் நேர்ந்தனன் போற்றி"* என்று ஒற்றைச் சுடர் காட்டுக.

**3.3.0.** *"ஓம் அப்பம் மோதகம் அமுதுபல வகைகள்*
*இப்பொழு திங்கே படைத்தனன் போற்றி*
*வாழை மாபலா மணிதிகழ் மாதுளை*
*ஏழை அளித்தேன் ஏற்க போற்றி"*

என்று ஓதி அமுது படைக்க.

**3.4.0.** பிறகு,

ஓம் முற்றா இளந்தளிர் எண்ணி எடுத்த
வெற்றிலை பாக்கு வழங்கினன் போற்றி

என்று ஓதி தாம்பூலம் கொடுக்க.

**3.5.0.** இனி, விநாயகப் பெருமானுக்கு அருச்சனை செய்க. 'அருச்சனை பாட்டே ஆகும்' என்ற வாக்கிற்கு இணங்க ஔவையார் பாடிய 'விநாயகர் அகவலை' ஓதி மலர் தூவுக. நேரம் இருக்குமாயின் ஆசிரியர் எழுதிய 'பிள்ளையார் போற்றி நானூறு' என்ற நூலில் ''திருத்தலங்கள், அகப்புறச் சமயங்களில் கணபதி, புறப்புறச் சமயங்களில் கணபதி, வேண்டுதல்'' என்ற தலைப்புகளில் உள்ள போற்றிகள் சேர்ந்து 108 போற்றிகளை ஓதி மலரிடுக. இவை இரண்டும் வாசகர்களுக்கு உதவ பிற்சேர்க்கையாக கொடுக்கப்பட்டிருப்பது காண்க. இனி வரும் அட்ட புட்ப போற்றியை ஓதி மலரிடுக.

ஓம் கொல்லா நோன்பருளும் கூத்தா போற்றி
ஓம் ஐந்தடக்கும் ஆற்றல் அருள்வோய் போற்றி
ஓம் பொறையுடைமை கைக்கொளச்செய் புலமையோய் போற்றி
ஓம் அருள்வழியே நடப்பிக்கும் அன்பே போற்றி
ஓம் அறிவுருவாய் ஆக்குவிக்கும் அண்ணால் போற்றி
ஓம் வாய்மை நெறி நிற்பிக்கும் வள்ளால் போற்றி
ஓம் தவநெறியே சார்விக்கும் தக்கோய் போற்றி
ஓம் அன்புநெறி ஒழுகச்செய் இன்பே போற்றி

குறிப்பு : ஏனையவற்றை விட்டாலும் இந்த அட்ட புட்ப போற்றியை விடக்கூடாது. இந்த எட்டும் சொன்ன பிறகுதான் மலர்தூவ வேண்டும். தனித்தனியே தூவக்கூடாது. மலர்களை உச்சிக்குக் கொண்டுபோய் கண்களில் ஒற்றி இருதயத்தில் வைத்து எட்டு போற்றிகளும் முடிந்தபின் பிள்ளையார் மீது மலர்களைச் சொரிக.

**3.6.0.** பின்னர் பீடுடைய பதினாறு பணிவிடைகள் (சோடச உபசாரம்) செய்க. இயலாதவர்கள்,

ஓம் எண்ணிரண் டெடுத்த கலையாய் விரியும்
கண்ணுப சாரம் களிக்க போற்றி

என்று ஓதி மலர் தூவுக.

**3.7.0.** இனி மந்திர மலர் சாற்றுதல் வேண்டும். பன்னிரு திருமுறைகளோ அல்லது பஞ்சபுராணமோ பாடி அவரவர்க்கு விருப்பமான விநாயர் துதிப்பாடல்களைப் பாடுக. ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் மலர் தூவுக.

**3.8.0.** வீட்டில் உள்ள அனைவரும் அவரவர் மனதில் வேண்டுவது நினைத்து மலர் சொரிக. பூசை செய்பவர், அப்போது தாமும் மலர் சொரிந்து,

ஓம் நானா விதத்திலும் நவிலும் பூமழை
சேனா பத்தரொடு சொரிந்தனன் போற்றி

என்று ஓதுக.

**3.9.0.** இனி பெரும்பேரொளி வழிபாடு ஆற்றுக. ஐங்கலைக் கற்பூர ஒளி அல்லது பெரிய கட்டி கற்பூரத்தை ஏற்றி விநாயகருக்குக் காட்டி,

ஓம் பெருங்கற்பூர தீபம் எடுத்தேன்
திருமங் களம்தந் தருளுக போற்றி

என்று ஓதுக. விபூதி எடுத்து கற்பூர ஒளியைச் சுற்றி காட்டி பிள்ளையார் மேல் தூவி சிறிதளவு விபூதியை உச்சிமேல் காட்டி விபூதி சம்புடத்தில் சேர்க்க. அது ஒளி நீறு எனப்படும்.

**3.10.0.** வீட்டில் எல்லோரும் விநாயகரைச் சுற்றி வந்து வணங்கி எழ, பூசை செய்பவர்,

ஓம் பொலிக இவ்விடம் பொலிந்தினிதருளி
மலிக திருவருள் எங்கணும் போற்றி

என்று ஓதி மலர் தூவுக. எல்லோருக்கும் ஒளிநீறு
– பார்க்க பககம் 6...

# விநாயகர் வழிபாட்டு பிற்சேர்க்கை
# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பும் பலஇசை பாட
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் சுருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுக்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்து
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டி
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும்மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே !

– 6ம் பக்கத் தொடர்ச்சி...

வழங்குக.

**3.11.0.** விநாயகர் சிறப்பு வழிபாடு நிறைவேறியது, அதன் அடையாளமாக வாழ்த்து பாடி நிறைவு செய்க. வாழ்த்து வருமாறு :

ஓம் அந்தணர் வானவர் ஆனினம் வான்மழை
தந்தர சுலசம் தழைக்க போற்றி
தூயவை ஓங்கி தீயவை ஆழ்ந்து
நேயவுன் நாமமே சூழ்க போற்றி
போற்றி போற்றி பழம் பொருள் அறிவே
போற்றி இன்ப வாரிதி போற்றியே!

# விநாயகர் 108 போற்றி

எத்தனை தலங்கள் எங்கெல்லாம் மேவி
பத்தரைக் காக்கும் பரமா போற்றி
ஆவடு துறையுள் மேவிடும் மூர்த்தம்
பூவிடும் அழகிய விநாயக போற்றி !
வந்தனை மகிழ அத்தலம் போற்றி
நந்துணை வந்த விநாயக போற்றி
பவந்தனை ஒழிக்க அப்பதி விளங்கும்
சிவப்பிர காச விநாயக போற்றி 5
திருநறை யூர்ச்சித் தீச்சரம் தன்னில்
மருவிய ஆண்ட விநாயக போற்றி
ஐயா றதனில் அன்பாய் மேவிய
சைவா ஆதி விநாயக போற்றி
விருத்தா சலத்தே விளங்கிடு வேழமே
திருவா ழத்துப் பிள்ளையே போற்றி
திருச்சி உச்சிப் பிள்ளை எனப்புகழ்
விரிச்சி ருக்கும் விநாயக போற்றி
திருவிடை மருதில் கருவிடைப் போகா
மருவிடும் ஆண்ட விநாயக போற்றி 10
குடந்தைக் கீழ்கோட் டப்பேர் தலத்தில்
மடந்தை கங்கை கணபதி போற்றி
திருக்கா றாயில் தலத்தே விளங்கி
இருக்கும் கடுக்காய் விநாயக போற்றி
நாகே சுரத்தில் நலமாய் விளங்கிடும்
வேகக் கங்கை விநாயக போற்றி
சால உயர்ந்த திருக்கச் சூரில்
தால மூல விநாயக போற்றி
அத்தல மதனில் அழகுற விளங்கிய
சித்தியல் கருக்கடி விநாயக போற்றி 15
உள்ளற் கரிய கடவூர் தன்னில்
கள்ள வாரணப் பிள்ளையார் போற்றி
திருக்கடிக் குளத்தில் தேவைக் கருளி
உருப்பெறும் கற்பக விநாயக போற்றி
முருகன் பூண்டி யதனில் மேவிய
சிறுவா கூப்பிடு பிள்ளை போற்றி
திருக்கரு காவூர் தலத்தில் திகழும்
பெரும்பேர் கற்பக விநாயக போற்றி
திருநாட் டியத்தான் குடியில் மேவிய
ஒருகை காட்டி விநாயக போற்றி 20
தில்லை திகழ்ந்து தனிப்பெருங் கருணை
எல்லையில் கற்பக விநாயக போற்றி
ஒருவரை சுட்டா உயர்தல மதனில்
திருமுறை சுட்டிய விநாயக போற்றி
அங்கே விளங்கும் அரிய பெரிய
துங்கமுக் குறுணி விநாயக போற்றி
என்பால் வருக எனஅத் தலத்தில்
அன்புச் சிட்ட விநாயக போற்றி
வரத மாக அத்தலம் விளங்கும்
நரமுக விநாயக நாத போற்றி 25
மயலறு தில்லைத் தலமதில் மருவும்
உயர்செங் கழுநீர் பிள்ளையார் போற்றி
திருக்கொட்டையூரில் திகழ்ந்தினி தருளைப்
பெருக்கும் கோடி விநாயக போற்றி
தீரம் திகழ தலமதில் அமர்ந்த
வீர கத்தி விநாயக போற்றி
வெந்திறல் வினையை வீட்டுக்கீழ் வேளூர்
சுந்தர கணபதி சேவடி போற்றி
போதந் திகழ திருவுசாத் தான
சூதவ னப்பிள்ளை யாரே போற்றி 30
அன்பிலா லந்துறை ஆய்ந்ததில் அமர்ந்த
நன்செவி சாய்த்த விநாயக போற்றி
நள்ளா றதனில் நடுவுற அமர்ந்த
விள்ளரும் சொர்ண விநாயக போற்றி
திருமழ பாடியில் திருவீற் றிருக்கும்
ஒருபெருஞ் சுந்தர கணபதி போற்றி
பனையூர் தன்னில் பாங்குற அமர்ந்த
வினைத்துணை இருந்த விநாயக போற்றி
நாகை தன்னில் நலமுற விளங்கிய
வாகை மாவடி விநாயக போற்றி35
போகா வினைகள் போக்கி யாங்கிரு
நாகா பரணப் பிள்ளையார் போற்றி
விஞ்சிய முத்தி வழங்கி யாங்கிரு
பஞ்ச முககண பதியே போற்றி
திருவின் னம்பர் தேர்ந்ததில் திகழும்
நிருத்தன விநாயக நாத போற்றி
திருப்பதி வீழி மிழலையில் திகழும்
ஒருபடிக் காசு விநாயக போற்றி
புறம்பயம் அதனில் அறம்பல ஆற்றி
சிறந்த சுவைத்தேன் விநாயக போற்றி 40
வரம்பல வழங்கி புறம்பயம் விளங்கும்
பிரளயங் காத்த பிள்ளையார் போற்றி
வெய்ய வினைதணி மாகறல் விளங்கும்
பொய்யா விநாயக புண்ணிய போற்றி
குருசம் பந்தன் காழியில் விளங்கி
கருதா பத்துக் காத்தவ போற்றி
நாரை யூரில் நேருற விளங்கும்
வாரப் பொல்லாப் பிள்ளையார் போற்றி
அம்பல் என்னும் ஊரில் அமர்ந்து
உம்பர் சுட்டு விநாயக போற்றி 45
வெண்ணெய் நல்லூர் விளங்கி இருக்கும்
புண்ணியப் பொல்லாப் பிள்ளையார் போற்றி
சாற்றரும் தலமாம் திருவா ரூரில்
மாற்று ரைத்த விநாயக போற்றி
ஆலுந் தலமாம் திருவா ரூரில்
மூலா தார கணபதி போற்றி
இருவா தனையும் இரியுமத் தலந்திகழ்
திருவா தாபி விநாயக போற்றி
ஆல வாயில் அழகுற அமர்ந்த
சீலமுக் குறுணிப் பிள்ளையார் போற்றி 50
வல்லந் தன்னில் விளங்கி யருள்கூர்
நல்வர சித்தி விநாயக போற்றி
திருமா யூரம் திகழுறு கோடு
வருமுக் குறுணிப் பிள்ளையார் போற்றி
திருக்களர் தன்னில் உளங்கிளர்ந் தாவன

விருத்திசெய் வலம்புரி விநாயக போற்றி
இகபரம் வழங்கிக் காஞ்சியில் இருக்கும்
விகட சக்கர விநாயக போற்றி
அத்திக் கடவுளாய் அத்தி கிரியில்
சித்தி வலம்புரி விநாயக போற்றி 55
திருப்புக லூரில் திருப்புகழ் விளங்கி
மருவுவா தாபி விநாயக போற்றி
செங்காட் டங்குடி சேர்ந்தினி தருளும்
துங்கவா தாபி விநாயக போற்றி
வலஞ்சுழி யதனில் வீறுடன் விளங்கி
நலஞ்செயும் வெள்ளை விநாயக போற்றி
வேதி குடியில் போதித் திருக்கும்
ஆதி வேதப் பிள்ளையார் போற்றி
நாளும் நல்லூர் நயந்தினி திருக்கும்
சாளக் கிராம விநாயக போற்றி 60
திருந்து தேவன் குடியில் தெளிவாய்ப்
பொருந்துகர்க் கடக விநாயக போற்றி
மயூர புரந்தனில் மகிழ்ந்தினி தருளும்
மயூர கணபதி மாயிறை போற்றி
காசி தன்னில் கவின்பெற விளங்கும்
தேசுடை துண்டி விநாயக போற்றி
மெய்த் தமிழ் விளங்கும் மதுரையில் அடியார்
உய்த்த சித்தி விநாயக போற்றி
பெருங் காளத்தி புண்ணிய தலத்தில்
திருமஞ் சந்தி விநாயக போற்றி 65
திருக்கோ கர்ணம் தலத்தினில் விளங்கி
இருக்கும் இறைமகா கணபதி போற்றி
விழுமிய பழுவூர் விமலன் கோவிலில்
கெழுமிய சுந்தர கணபதி போற்றி
தென்கா சித்தலம் திருவுடன் விளங்கி
மன்னும் லட்சுமி கணபதி போற்றி
செல்லக் கதிர்கா மந்தனில் செறிந்த
நல்லமா ணிக்க விநாயக போற்றி
வேலூர் சேண்பாக் கத்தே தானாய்
ஆலித் தெழுந்த கணபதி போற்றி 70
சித்தியல் வள்ளி மலைத்தவப் பீட
கைத்தல நிறைகனி கணபதி போற்றி
சின்னம் மாறி சுசீந்திர மதனில்
மன்னும் கஜானனி கணபதி போற்றி
சபல்பூர் அருகே பீரோகேட்டில்
இபப்பெண் வடிவ கஜானனி போற்றி
மும்பை நகரில் பற்பல சந்தி
தம்பா லெழுந்த தயவே போற்றி
ஒய்சலந் தன்னில் ஓங்கி எழுந்த
தெய்வ நிருத்த கணபதி போற்றி 75
தானாய் முளைக்கும் கணபதி குண்ட
பாணக் கணபதி பரமா போற்றி
பிள்ளையார் பட்டியில் பேருரு எடுத்து
கொள்ளை அருள்தரும் கணபதி போற்றி
அகப்புறச் சமயம் அன்புடன் வணங்க
இகபரம் நல்கும் கணபதி போற்றி
காணா பத்தியம் கனிவுடன் வணங்கும்
கேணான் எனவரு கணபதி போற்றி
சாக்தேயர் சிறந் தேத்தி வழிபடும்
சூக்த சத்தி கணபதி போற்றி 80

தெய்வந் தற்பரம் சிவமொன் றேயெனும்
சைவர் துதிசிவ கணபதி போற்றி
வகுளா பரணனே பரமெனும் வைணவர்
உகளும் விட்டுணு கணபதி போற்றி
சாங்கியர் தம்மதம் சாற்றி வணங்கும்
பாங்கியல் தத்துவ கணபதி போற்றி
மீமாம் சகர்மே னாளில் முறையுரை
நாம தேவ கணபதி போற்றி
வையா கரணிகள் வழிபா டியற்றும்
தெய்வா சப்த கணபதி போற்றி 85
நித்தம் சோதிடம் நினைபவர் வணங்கும்
உத்தி ராட கணபதி போற்றி
எண்ணிய லாளர் ஏத்தி வணங்க
ஒன்றில் ஒன்றிய கணபதி போற்றி
தாயுள்ளம் புரை ஆயுள் வேதியர்
வாயுள் மூல கணபதி போற்றி
புறப்புறச் சமயம் பிறபல நாடும்
உறவொடு வணங்கும் உத்தம போற்றி
காந்தி பிறந்த குஜராத் தன்னில்
ஏந்தலே அருகர் ஏத்தினர் போற்றி 90
சாக்கியச் சான்றோர் கணபதி இருதய
பாக்கிய மந்திரம் பகர்ந்தனர் போற்றி
ஞான தேவன் எனச்சாக் கியர்சொல்
மான வணக்கம் மகிழ்ந்தனை போற்றி
புத்தர் சூட்டிய பெருந்தலைப் பாகை
மெத்த அணிந்த மகோதர போற்றி
கம்போடி யாவில் சங்கொடு சக்கரம்
நம்பா விளங்க நின்றனை போற்றி
ஜாவா காந்தி சிங்க சாரியில்
மேவி இருக்கும் கணபதி போற்றி 95
விவேகா நந்தர் வேண்டி எடுத்த
நவஅமெ ரிக்க விநாயக போற்றி
பர்மிய மொழியில் மகாபிணி என்ன
தர்ம தேவதை ஆனாய் போற்றி
மங்கோலியத்தில் தோத்கார் என்னும்
எங்கோன் இறையே கணபதி போற்றி
திபேத்திய மொழியில் த்சோக் ப்ராக் என்னும்
குபேர லட்சுமி கணபதி போற்றி
கம்போ டியமொழி பிராக்கணே சென்று
தம்பேர் சொல்லித் திகழ்ந்தனை போற்றி 100
சீன மொழியில் குவான்சிடி இக்கென
ஆன ஆனைக் கணபதி போற்றி
சப்பான் மொழியில் விநாயக் ஷாவெனும்
அப்பேர் விளங்கும் அப்பனே போற்றி
உலகம் எங்கணும் மேவி இருந்து
நலம்பல அடியார்க் கருளினை போற்றி
சொல்லும் ஆவணி சதுர்த்தி நோற்க
எல்லையில் கருணை புரிவாய் போற்றி
இட்டது நன்மலர் உரைத்தது மந்திரம்
சிட்டனே ஏற்றனன் என்றருள் போற்றி 105
இடும்பைக் கிடும்பை படுத்தென் னிடரெலாம்
நடுங்கி ஒழிய நேர்க போற்றி
நாளும் கோளும் நல்லன அன்றி
மூளா தெம்மை ஆள்க போற்றி
இம்மையில் செல்வமும் மறுமையில் வீடும்
மெய்யம்மையாக மகிழ்ந்தருள் போற்றி. 108

# தெய்வமுரசு

## ஆன்மீக மாத இதழ்

- தமிழ் உணர்வு பொங்க வரும் தனித்தெய்வ மாத இதழ்!
- ஆன்மீகமும், அருந்தமிழும் கலந்த அற்புதமான மாத இதழ்!
- தமிழின் மாண்புகளும் திருமுறை பெருமைகளும் இணைந்து உருக்கி வார்த்த வேலாக புறப்படுகிறது இந்த மாத இதழ்!
- சுற்றி நில்லாதே போ இருளே! துள்ளி வருகுது வேல்!
- சிக்கல் நிறைந்த கேள்விகளுக்கெல்லாம் தக்க பதில்களைத் தாங்கி சுந்தரத்தமிழில் சுடச்சுட வரும் கேள்வி – பதில் பகுதி!
- தமிழ் அறிஞர்களின் கட்டுரைகளும், சுவையான பேட்டிகளும் நிறைந்த இதழ்!
- உண்மை பக்தி நெறியை உலகில் நிலைநாட்ட வரும் ஒரே இதழ்!
- நாடறிந்த திருமந்திரத் தமிழ்மாமணி, செந்தமிழ் வேள்விச்சதுரர் **மு.பெ.சத்தியவேல் முருகனார்** ஆசிரியராக இருந்து அரிய தலையங்கங்களை எழுதுகிறார்.
- நடைமுறை காலத்தில் விடைமுறை கிடைக்காத அவ்வப்போதைய ஆன்மீக பிரச்சனைகளை அலசி ஆராய்கின்ற ஒரே சிறப்பு இதழ்!

| | 1 ஆண்டு | 5 ஆண்டு | புரவலர் | ஆர்வலர் |
|---|---|---|---|---|
| சந்தா | ரூ.100.00 | ரூ.500.00 | ரூ.1000.00 | ரூ.10,000.00 |

**விளம்பரம்:**

பின் அட்டை வெளிப்பக்கம் - ரூ. 3000.

மேலட்டை உள்பக்கம் - ரூ. 2500. பின் அட்டை உள்பக்கம் - ரூ. 2000.

முழுப்பக்கம் உள்ளே - ரூ. 1000. அரைப்பக்கம் உள்ளே - ரூ. 600.

**சந்தா மற்றும் விளம்பர கட்டணங்களை உங்கள் அருகில் உள்ள பாரத ஸ்டேட் வங்கி(SBI) கிளைகளில் செலுத்தலாம்.**

**DHEIVA MURASU SBI A/C NO:10477444814**

பணம் செலுத்திய இரசீதினைத் தங்கள் முழு முகவரியுடன் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**தெய்வமுரசு**

9/1, மாஞ்சோலை முதல் தெரு,
கலைமகள் நகர், ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை – 600 032

# தெய்வமுரசு

ஆன்மீக மாத இதழ்

## சந்தா படிவம்

பெயர் : ______________________

முகவரி : ______________________

______________________

______________________

______________________

தொலைபேசி : ______________________

கைபேசி : ______________________

மின்னஞ்சல் : ______________________

| ஆண்டு : | ஒன்று | ஐந்து | பத்து | ஆயுள்(ஆர்வலர்) |
|---|---|---|---|---|
| இதழ் சந்தா கட்டணம் : | ☐ ரூ.100 | ☐ ரூ.500 | ☐ ரூ.1000 | ☐ ரூ.10,000 |

### பணம் செலுத்தும் முறை:

☞ **காசோலை** :– DHEIVA MURASU என்ற பெயரில்.

☞ **வங்கி வழி** :– உங்கள் அருகில் உள்ள பாரத ஸ்டேட் வங்கி (SBI) கிளைகளில் DHEIVA MURASU என்ற பெயருக்கு A/C.No. 10477444814 என்ற எண்ணில் சந்தா செலுத்தி, இரசீதினையும் இப்படிவத்தையும் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

☞ **பணவிடைத் தாள்** :– பணவிடைத்தாள்(M.O) படிவத்தில் தகவலுக்கான இடத்தில் உங்கள் முழு முகவரியை மறக்காமல் எழுதி, சந்தாவை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**தெய்வமுரசு**
**9/1, மாஞ்சோலை முதல் தெரு,**
**கலைமகள் நகர், ஈக்காட்டுத்தாங்கல்**
**சென்னை – 600 032**